**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RANIPET**

## OS.NO. 43/2008 PW-2

| | |
|---|---|
| Name | கஜேந்திரன் |
| Husband/Father Name | குமார் |
| Village /Area | |
| Taluk | |
| Occupation | கிராம நிர்வாக அலுவலர், செம்பேடு மற்றும் ஒழலை (கூடுதல் பொறுப்பாக கே.வேலூர்) |
| Age | 30 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of date 30.09.2024 சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

உங்களுக்கு நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வந்ததா என்றால் ஆமாம். ஆற்காடு வட்டாட்சியர் இவ்வழக்கில் இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அனுமதி வழங்கிய அத்தாட்சி கடிதம் **வ.சா.ஆ.14** ஆக வழக்கில் குறியீடு செய்யப்படுகிறது. சர்வே எண் 269/1 உண்டான ஆவணம் கொண்டு வந்துள்ளீர்களா என்றால் ஆமாம். சர்வே எண் 269/1 என்னவாக பத்மநாபன் பெயரில் உட்பிரிவாகியுள்ளது என்றால் சர்வே எண் 269/1/157 ஆக பிரிவாகியுள்ளது. பத்மநாபனுக்கு மேற்சொன்ன சர்வே எண் குறித்து பட்டா எண் வழங்கப்பட்டுள்ளது அந்த பட்டா எண் 387 ஆகும். மேற்சொன்ன சர்வே எண்ணுக்கான 'அ' பதிவேடு **வ.சா.ஆ.15** ஆக வழக்கில் குறியீடு செய்யப்படுகிறது. அ பதிவேட்டில் பத்மநாபன் பெயரில் உட்பிரிவாகியுள்ள விவரம் காணப்படுகிறது. எதன் அடிப்படையில் பத்மநாபன் பெயருக்கு உட்பிரிவு

செய்யப்பட்டது என்ற Proceedings விவரம் வ.சா.ஆ.15 ல் காணப்படுகிறது.

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

யூடிஆர் ஆவணப்படி தாவா சொத்து கிராம நத்தமாக வகைபாடு செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். யூடிஆர் 1987 க்கு உண்டான பதிவேடு என்றால் ஆமாம். 1987 க்கு பிறகு யார் யார் எல்லாம் சொத்தை அனுபவித்து வந்தார்களோ அவர்கள் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அதன்படி பத்மநாபன் அனுபவித்து வந்த சொத்துக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் கூட்டு பட்டாவாக அவர் பெயரில் வழங்கப்பட்டுள்ளது அந்த கூட்டு பட்டாவில் அண்ணாசாமி முதலியார் வாரிசுகள், பத்மநாபன், சத்தியநாராணயன், கிருஷ்ணன் ஆகியோர் பெயரில் உள்ளது. அதன் பிறகு உட்பிரிவு செய்யப்பட்டு பத்மநாபன் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். எந்த ஆண்டு பட்டா வழங்கப்பட்டது என்றால் 2019 ம் ஆண்டு வழங்கப்பட்டது.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

Sd/- *********
District Munsif cum Judicial Magistrate,
Ranipet.